# தேசிய அரச முறைமைகளின் செயற்பாடுகளில் பூகோளமயவாக்கம் செலுத்தும் செல்வாக்கு

நபீலா இப்றாஹிம், சிவநாயகம் செ

பூகோளமயமாதல் உலகிலுள்ள பல்வேறுபட்ட பிராந்தியங்கள், அரசுகள், மக்களுக்கிடையில் தொடர்புகளையும், தங்கியிருத்தலையும் ஏற்படுத்தியுள்ளது. பூகோளமயமாதல் உலகத்தினைச் சிறிய கிரகமாக (World Planet) அல்லது பூகோளக் (Global Village) கிராமமாக மாற்றி யுள்ளதாக நம்பப்படுவதுடன், இது உலக அரசாங்கம் ஒன்றைத் தாபிப்பதற்கான முன்னோக்கிய பாய்ச்சலாகவும் கருதப்படுகின்றது. உலக அரசாங்கத்தினை தாபிப்பது தொடர்பாக பெரும் தத்துவஞானிகளாகிய ரூசோ, கான்ற், கிறீன் போன்றவர்கள் கனவு கண்டுள்ளார்கள். மூலதன நீரோட்டம், புதிய தொழில் நுட்பம் உலகத்திலுள்ள பின் தங்கய பிராந்தியங்களின் அபிவிருத்திக்குத் தலைமை தாங்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் என்ன நடைபெறுகின்றது என்பதை தகவல் தொழில் நுட்பம் வெளிச்சத்திற்கு கொண்டு வருகின்றது. இது அனேக நாடுகள் ஜனநாயக முறை மையின் தொழிற்பாட்டினைக் கற்கின்றன என்ற செய்தியையும், ஜனநாயகமயவாக்கத்திற்குள் வருகின்றன என்ற செய்தியையும் தருகின்றது. சமத்துவத்துடனான சுதந்திரத்தினை உலக மக்கள் அனைவரும் புரிந்து கொள்வதற்கான வாய்ப்பினையும் இது வழங்குகின்றது. மேலும் வறுமை, வேலையின்மை, கல்வியறிவின்மை, நோய்கள், பட்டினி போன்றவற்றினை இல்லாதொழிப்பதற்கான முயற்சிகளைச் சர்வதேச நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன. இன்று *பூகோளளவில் சிந்தித்து தேசியளவில் செயற்படுதல* (Think Globally, Act Nationally) என்ற கோசம் முதன்மை பெற்று வருகின்றது. பூகோளமும் உள்ளூரும் இணைந்து *'Glocal'* என்றாகிவிட்டது *(Global + Local = Glocal)* பிரான்சிய எழுத்தாளர்களாகிய SONNATAG, ARENAS ஆகிய இருவரும் இதனை *'HYBRIDIZATION'* (கலப்புப்பண்பாதல்) என அழைக்கின்றனர். எனவே பூகோளமயமாதல் தேசிய அரச முறைமையின் இயல்புகளில் செல்வாக்குச் செலுத்தி பூகோள அரசாங்கத்தினை உருவாக்குவதற்கான முன் நிபந்தனைகளை உருவாக்குகின்றது.

இவ்வகையில் தேசிய அரச முறைமைகளின் செயற்பாடுகளில் பூகோளமயமாதல் செலுத்தும் செல்வாக்கினால் *"சமூகத்தில் தனியதிகாரமுடையது அரசு"* என்ற கோட்பாடும், *"இறைமை பற்றிய ஒருமைவாதக் கோட்பாடும்"* (Monistic) மீள் விவாதத்திற்குரியதாகின்றது. எனவே இக்கட்டுரை இவ்விரண்டு எண்ணக்கருக்களையும் ஒருங்கிணைத்து ஆய்வுசெய்கின்றது

திறவுச் சொற்கள்: பூகோளமயமாதல், தேசிய அரச முறைமை, இறைமை

*சமூக விஞ்ஞானங்கள் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம் E-mail: nafi_ibr@yahoo.com*